நிதித்துறையில்
நாணயம் மிக்க நண்பன்
ஷப்றா
207, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

YOUR FRIENDS IN FINANCE
SHABRA
2, R. A. De Mel Mawatte,
COLOMBO - 4.
Telephone:- 508087—90

திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 23 ஞாயிற்றுக்கிழமை (08-09-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 278

## கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ள போதிலும்

# லலித் குழுவினரின் எம்.பி. பதவிகள் இப்போதைக்குப் பறிபோகமாட்டா!

### அரசமைப்புக் கைகொடுக்கிறது

கொழும்பு, செப்டெம்பர் 8

முன்னாள் அமைச்சர்களான லலித் அத்துலத் முதலி, பிரேமச்சந்திரா, காமினி திஸாநாயக்கா உட்பட எட்டு எம்.பிக்கள் நேற்று ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து நீக்கப்பட்டனர்.

எனினும் அரசமைப்புச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய அவர்கள் தொடர்ந்தும் சிலகாலம் எம்.பிக்களாகச் செயற்படலாம்,

அவர்கள் தங்கள் பதவிகளைக் காப்பாற்றிக் கொள்ள அரசமைப்பின் 99 (13) (அ) பிரிவு கைகொடுக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் வெள்ளிக்கிழமை ஜனாதிபதி பிரேமதாஸா தலைமையில் நடைபெற்றபோது லலித் அத்துலத் முதலி, காமினி திஸநாயக்கா, வின்சென்ட் பெரேரா உட்பட எட்டு உறுப்பினர்களை கட்சியில் இருந்து நீக்கும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

பிரேமரட்ண குணசேகர, லக்ஷ்மன் செனிவிரட்ன, சமரவீர வீரவன்னி, சந்திரா கங்கந்த, ஜி. எம். பிரேமச்சந்திரா ஆகியோரே கட்சியில் இருந்து நீக்கப்பட்ட ஏனைய ஐவரும் ஆவர்.

செயற்குழுக் கூட்டத்தில்

[3 ஆம் பக்கம் பார்க்க]

### அமைதிப் படை அதிகாரி தற்கொலை

புதுடில்லி, செப்: 8

அமைதிப்படை அதிகாரியாக இலங்கையில் பணிபுரிந்த இந்திய ஜெனரல் ஒருவர் தற்கொலை செய்து கொண்டார்.

மேஜர் ஜெனரல் ஏ. எம். மாலிக் எனிபவரே தற்கொலை செய்து கொண்டவர் ஆவார்.

புதுடில்லியுள்ள இராணுவத் தலைமையகத்தின் ஏழாவது மாடியிலிருந்து இவர் குதித்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. [த]

### நாடு முழுவதும் பிரசாரக் கூட்டங்கள்

நாடு முழுவதும் பிரேமாவுக்கு எதிரான அரசியல் கூட்டங்கள் நடத்தப்படவுள்ளன.

இன்றைய அரசியல் நிலைமை குறித்து மக்களுக்கு தெரியப்படுத்தவே தாம் பிரசாரக் கூட்டங்களை நடத்தப் போவதாக திரு. காமினி திசாநாயக்கா நேற்றுத் தெரிவித்தார். (ஓ)

### முச்சந்தி முரளி



பக்த கோடிகளுக்கு மத்தியிலை 'கேடி'களும் புகுந்திட்டினம் போலை......!

# பிரேரணை தோற்றாலும் பிரேமாவுக்குப் பாதிப்பே!

கொழும்பு, செப், 8

"ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணை நாடாளுமன்றத்தில் எடுக்கப்பட்டால் — அது அங்கு தோற்கடிக்கப்பட்டாலும் — அதனால் ஜனாதிபதிக்கு பெரும் பாதிப்பு ஏற்படும்",

கொழும்பில் உள்ள பி. பி. ஸி. செய்தியாளர் கிறிஸ்தோபர் மொறிஸ், பி. பி. ஸியின் 'செய்தி வேளை' நிகழ்ச்சிக்கு வழங்கிய விசேட செய்தியில் இப்படித் தெரிவித்திருக்கிறார்.

இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றம் மீண்டும் இம்மாதம் 24 ஆம் திகதி கூடும் போது ஜனாதிபதி மீதான அரசியல் குற்றப் பிரேரணை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது என்று கூறுவதற்குக் காரணம் ஏதுமில்லை.

இந்தப் பிரேரணையில் ஆளும் கட்சியைச் சேர்ந்த நாற்பதுக்கும் அதிகமான எம்.பிக்கள் கையொப்பமிட்டிருக்கின்றனர்.

இவர்களில் எட்டுப்பேரைத் தவிர ஏஞ்சியோர் மிரட்டலுக்குப் பயந்து நாடாளுமன்றம் மீண்டும் கூடும் வரை அமைதியாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

எது எப்படியிருந்த போதிலும் —

அரசியல் குற்றப்பிரேரணை விஷயத்தில் ஜனாதிபதி வெற்றி பெறுவாரா, தோல்வி அடைவாரா என்பதல்ல விஷயம்.

ஆனால் அவர் சில கஷ்டங்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## 'ஆனையிறவு முற்றுகையை உடைத்தது பெரியவெற்றியல்ல

### 'புரொன்ட்லைன்' ஆசிரியர் ராம் கருத்து

சென்னை, செப். 8

ஆனையிறவு இராணுவ முகாம் முற்றுகையை உடைத்தது அரசப் படையினருக்கு பெரிய வெற்றி அல்ல; முகாம் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சி அடைந்து விடாமல் அவர்களின் முற்றுகையை முறியடித்ததே அதில் குறிப்பிடத்தக்கது. ஆனால் ஆனையிறவு யுத்தம் அரசியல் மற்றும் உளரீதியில் குறிப்பிடத்தக்கதாக உள்ளது.

"புரொண்ட்லைன்" சஞ்சிகையில் அதன் ஆசிரியர் திரு. என், ராம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பற்றி 'கொழும்பு டயறி'' என்ற தலைப்பில் அவர் தெரிவித்துள்ள மற்றும் சில கருத்துக்கள் வருமாறு:-

★ ஆனையிறவு யுத்தத்தின் விளைவாக — அரசப் படைத் தலைமையில் ஒரு பிரிவினர் இராணுவ நடவடிக்கையை சாவகச்சேரிக்கு விஸ்தரித்து பின்னர் யாழ்ப்பட்டினம் வரை கொண்டு போக வேண்டும் என்பதில் அக்கறையாக உள்ளனர்.

★ சயனைட் உட்கொள்ளாத பட்சத்தில் திரு. பிரபாகரனை உயிருடன் பிடிக்கக் கூடிய திறமையும் தகவல்களும் தங்களிடம் இருப்பதாக இராணுவத் தளபதி ஹமில்டன் வனசிங்கா புழுகியிருக்கிறார்.

★ என்னதான் வந்தாலும், இராணுவத் தீர்வு

[3 ஆம் பக்கம் பார்க்க]

## நல்லூரில் தேர் காண பெரும் பக்தர் வெள்ளம்

நல்லூர் கந்தனின் தேர்த் திருவிழா மிகவும் பக்திபூர்வமாக நேற்று நடைபெற்றது. குடாநாட்டின் பல பாகங்களிலும் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் முருகப் பெருமான் தேரில் பவனி வரும் அருட்காட்சியைத் தரிசிக்க வந்திருந்தனர்.

அதிகாலை 4 மணிக்கே பக்தர் கூட்டம் சாரி சாரியாக ஆலயத்தை வந்தடையத் தொடங்கியது வாகன வசதி இல்லாத இந்த வேளையிலும் இவ்வளவு சன சமுத்திரம் கூடியதே என்று வியக்கும் அளவுக்கு மக்கள் ஆலயத்தின் உள்வீதியிலும், வெளிவீதியிலும் திரண்டனர்.

பக்தர் வெள்ளத்தின்— முருகன் அடியார்களின் "அரோகரா" கோஷத்துக்கும், பஜனை, பண்ணிசைக்கும் மத்தியில் வள்ளி தெய்வயானை சமேதராய் ஆறுமுகப் பெருமான் காலை ஏழு மணியளவில் அலங்காரச் சித்திரத் தேரில் எழுந்தருளி அருட்காட்சி கொடுத்தார்.

மாலையிலும் ஏராளமான மக்கள் தேரடித் திருவிழா காணத் திரண்டிருந்தனர்.

இன்று காலை ஏழு மணிக்கு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## நல்லூரில் பக்தர்களிடம் தங்கச் சங்கிலிகள் திருட்டு

யாழ்ப்பாணம், செப் 8

நல்லூர் கந்தன் தேர்த்திருவிழா தினமான நேற்று சனநெரிசலின் போது பக்தர்களிடம் இருந்து 4 தங்கச் சங்கிலிகளும் ஒரு தாலிக்கொடியும் திருடப்பட்டதாகக் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதே சமயம் நல்லூர் திருவிழா காலத்தில் கைக்கடிகாரங்கள் மற்றும் பொருள்களை தவற விட்டவர்கள் யாழ். மாநகர சுகாதாரப் பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-30-5)

## தமிழீழ மீட்பு நிதி

யாழ்ப்பாணம், செப். 8

எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை தினத்திலும், 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் தமிழீழ மீட்பு நிதி திரட்ட

[8 ஆம் பக்கம் பார்க்க]

## போல்டிக் குடியரசுகளுக்கு சீனா, இந்தியா அங்கீகாரம்

மொஸ்கோ, செப். 8

சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து சென்று சுதந்திர நாடுகளாக தம்மைப் பிரகடனப்படுத்தியுள்ள போல்டிக் குடியரசுகளான எஸ்தோனியா, லத்வியா மற்றும் லித்துஏனியா ஆகியவற்றை சீனா, இந்தியா மற்றும் எகிப்து ஆகிய நாடுகளும் அங்கீகரித்துள்ளன.

இதேவேளை—

சுதந்திரப்பிரகடனம் செய்துள்ள ஜோர்ஜியா குடியரசு, சோவியத் யூனியனுடனான தனது சகல தொடர்புகளையும் துண்டித்துள்ளதாக நேற்று அறிவித்தது. [உ-எ]

## ஷெல் தாக்குதல்

சுழிபுரம், செப். 8

காரைநகர் படையினர் நேற்று முன்தினம் மாலை 6-45 மணியளவிலும், நேற்று அதிகாலையிலும் ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

பொன்னாலையிலும் ... யிலும் ஷெல்கள் விழுந்து வெடித்தன. (ஓ-26-15)

## இஸ்ரவேலிய தூதரக விவகாரம் குறித்து

# பிரேமாவுடன் பேரம் பேச ஒரு குழு முயற்சித்ததாம்!

கொழும்பு, செப். 8

"இஸ்ரவேலிய நலன் காக்கும் பிரிவு கொழும்பில் தொடர்ந்து செயற்பட வேண்டும் என்பதில் ஒரு குறிப்பிட்ட குழு ஆர்வம் காண்பித்தது. அந்தக் குழு இஸ்ரவேலிய நலன் காக்கும் பிரிவு தொடர்ந்து செயற்பட வேண்டும் என்பதற்காக என்னிடம் 'பேரம்' பேச முயன்றது. அந்தக் குழு எவ்வளவு தொகை உதவியையும் அதற்காக வழங்கத் தயாராக இருந்தது."

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸ நேற்று ஐ. தே. க. தலைமை அலுவலகமான ஸ்ரீ கோதாவில் நடைபெற்ற கட்சித் தேசிய நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் உரையாற்றும் போது இவ்வாறு கூறினார்.

"எனது உயிரைத் தியாகம் செய்தேனும் ஜனநாயக நிர்வாக முறையைப் பாதுகாப்பேன்.

மக்களின் வாக்குரிமையை கள்ளவோட்டக்காரர்களும், ஜாக்பொட்காரர்களும் அழித்துவிட நான் இடமளிக்கப் போவதில்லை.

சூழ்ச்சி முடிவடைந்து விட்டதாக யாரும் எண்ணக்கூடாது. இத்தகைய சூழ்ச்சி மூலம் பிரேமதாஸாவுக்கு முடிவேற்பட்டாலும் நாட்டின் வாக்குரிமை முடிவுக்கு வருவதை நான் அனுமதிக்க மாட்டேன்.

இஸ்ரவேலிய நலன் காக்கும் பிரிவை நான் மூடினேன். பலஸ்தீனியர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டதன் காரணமாகவும், ஐ. நாவுக்கு மதிப்பளிக்கும் வகையிலும் இந்த நடவடிக்கையை எடுத்தேன்.

இஸ்ரவேலிய நலன் காக்கும் பிரிவை மூடியதும், அப்படி நடவடிக்கை எடுக்க

[3 ஆம் பக்கம் பார்க்க]

# தொண்டமான் இந்தியாவுக்கு அவசரமாக சென்றது ஏன்?

### பின்னணி குறித்துச் சந்தேகங்கள்

கொழும்பில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் அமைச்சர் தொண்டமான் அவசர அவசரமாக இந்தியா சென்றிருப்பது அரசியல் வட்டாரங்களில் பல்வேறு சந்தேகங்களைக் கிளப்பியிருக்கிறது.

விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் முதற்கட்ட பேச்சுக்களை நடத்துவதற்காக கடந்த வாரம் திரு. தொண்டமான் யாழ்ப்பாணம் செல்லவிருந்தார் என்றும்—

ஆனால் அரசியல் நெருக்கடிகளை அடுத்து அந்த விஜயம் அப்போது கைவிடப்பட்டது என்றும் கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன என்பது தெரிந்ததே இதனை தமது அறிக்கைகள் மூலம் திரு. தொண்டமான் ரூசகமாக ஊர்ஜிதப் படுத்தியிருந்தார்.

அரசியல் நெருக்கடி காரணமாக வடக்கு விஜயத்தை கைவிட்ட திரு. தொண்டமான், திடீரென முன்னரே திட்டமிடப்படாத விஜயம் ஒன்றை மேற்கொண்டு இந்தியா சென்றது ஏன் என்று தற்போது கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் சமரசத்தை ஏற்படுத்தும் ஆரம்ப முயற்சியில் திரு. தொண்டமான் ஈடுபட்டிருப்பது பற்றிய தகவல் வெளியானதை அடுத்தே அவரை இந்திய அதிகாரிகள் அவசர அவ...

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பாவித்த மரங்கள், சீற், முகட்டுச்சீற், கதவுகள், நிலைகள், 2x2' நெற் பிறேம் பலகைகள், மேசை, கதிரை, அலுமாரி, சோக்கேஸ், கடைக்குரிய தளபாடங்கள் விற்பனைக்குண்டு தொடர்பு: 07, கைலாசபிள்ளையார், கோவில் பின் வீதி, நல்லூர். [18037]

### தேவை

புடவை வியாபாரத்தில் அனுபவம் உள்ள பெண் விற்பனையாளர் தேவை. தொடர்பு ஏசியன் ரெக்ஸ் ரெயில் பலாலி றோட், திருநெல்வேலி. [18043]

பெண்கள், குழந்தைகள் அனைவரதும் உடைகளை மிகவும் நாகரீகமான முறையில் வெட்டித் தைத்துக் கொடுக்கக் கூடிய பெண் ரெயிலர் உடன் தேவை. நேரில் வரவும். தகுந்த சம்பளம் தரப்படும். திருமகள் தையல் நிலையம், [கல்வியங்காடு சந்தை அருகில் உள்ள பெற்றோல் செட் முன்பாக] கல்வியங்காடு. [18041]

குறைந்தது 250 இலே வாவது நிரக்கக்கூடிய மேடைத் தராசு உடன் தேவை விற்க விரும்புவோர் நிரக்கக்கூடிய அளவு விலை விபரத்துடன் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ தொடர்பு கொள்ளவும் சர்வோதய மாவட்ட இணைப்பாளர், 22, சீலன் வீதி இராசாவின் தோட்டம் யாழ்ப்பாணம். (18054)

### நூல்கள் தேவை

நல்ல நிலையிலுள்ள பின்வரும் நூல்கள் தேவை. MiKhail Sholokhov எழுதிய 'And Quiet Flows The Don' [4 Volumes] தி. ஜானகிராமனின் 'மலர்மஞ்சம்', 'செம்பருத்தி' விற்க விரும்புவோர் விலை, மற்றும் முகவரி விபரங்களுடன் தொடர்பு, கொள்க இல. 814, C/o உதயன். [4282]

### நோவு வைத்தியம்

ஓட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணெய், எஸ். கே. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். (4285)

### தவறிவிட்டது

கணபதிப்பிள்ளை விமலச்சந்திரன் ஆகிய எனது அடையாள அட்டை (591031392V) 6 - 9 - 91இல் நல்லூருக்கும், கொக்குவிலுக்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 219, பத்மஸ்தான், நாவலர் றோட் யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (18052)

### வகுப்புகள்

Typing Short-Hand வகுப்புகள் வார இறுதி நாள்களில் இரு பிரிவுகளாக நடத்தப்படுகின்றன. பயிற்சி முடிந்ததும் சான்றிதழ் வழங்கப்படும். Bond Institutes 58A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் [4287]

### APPLIED MATHEMATICS

G.C.E. A/L மாணவர்களுக்குரியவை. கோ - நேர வரைவி, சார்பு வேகம், தொடர்பு ஆர்முடுகல், அட்பு, எறியம், நீர்நிலையியல் ஆகிய பகுதிகள் அடங்கியவை. ஆக்கியோர்: P. வேலாயுதம் B Sc. [லெக்சரர்], S. பிரேம்நாத் B.Sc கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-0434)

### மணமகன் தேவை

26 வயது, 27 வயதுடைய ஆசிரியைகள் இருவருக்கு ஆசிரியர், அரச ஊழியர், கல்வி கற்று தனித்தொழில் புரிகின்ற 28-36 வயதுக்குட்பட்ட இந்து மணமக்கள் தேவை. தமிழீழத்தில் கடமை புரிபவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கவும். தொடர்பு இல. 813, C/o உதயன் [4274]

### திருமண சேவை

பெற்றோரே, கன்னியரே காளையரே, ஏக்கமா, இராகு தோசமா? விதவையா? பொருள் இருந்தும் இல்லாமலும் கலக்கமா? டாக்டர், மேல்நாடு பொறியியலாளர், உத்தியோகத்தர், வியாபாரி, தொழிலாளிவரை தேவையா? தேவை சொர்க்கத்தில் இறைவன் மண்ணில் மனிதரால் நிச்சயிக்கப்படும். நித்தியகல்யாணி ஏஜன்ட், ஆசிரியர் கலாசாலை வீதி, இருபாலை, கோப்பாய். [18045]

### இலவச திருமண சேவை

மேற்படி சேவையை நாடுபவர்கள் தங்களின் விலாசமிட்ட இரு தபால் உறைகளுடன் குறிப்பு, சமயம், உயரம், நிறம், கல்வி தொழில் கொடுப்பனவு எதிர்பார்ப்புகள் அடங்கிய விவரங்களுடன் அனுப்பிவைக்கவும். நேரடித் தொடர்பு ஞாயிறு காலையில் மட்டும். விமலதுரை ராசா 958/8 கே. கே. எஸ். வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (4690)

## சிவாசார்யாபிஷேகம்

[குருப் பட்டமளிப்பு]

### பிரம்மஸ்ரீ இ. சூரியப்பிரபாகர சர்மா

நிகழும் பிரசோற்பத்தி வருடம் ஆவணித் திங்கள் 24 ஆம் நாள் (9 - 9 - 1991) திங்கட்கிழமை 9-37 முதல் 10-30 வரை வரும் சுபமுகூர்த்தத்தில் அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவில் அர்ச்சகர் பிரம்மஸ்ரீ இ. சூரியப்பிரபாகர சர்மா அவர்களுக்கு சிவாசார்யாபிஷேகம் திருமுறைவருள் பாலித்துள்ளது.

தீட்சாகுரு இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர்

தா. மகாதேவக் குருக்கள்

சாதகர்: தெல்லிப்பளை துர்க்கா குருகுல ஆசிரியர் விஸ்வ. நாராயணசர்மா

மேற்படி ஆசார்யாபிஷேகம் கும்பழாவளைப் பிள்ளையார் கோவில் மண்டபத்தில் நடைபெறும் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

சிவஸ்ரீ சோ. இராமலிங்க குருக்கள் தம்பதிகள், திருமதி சி. இராமலிங்க ஐயர்.

கும்பழாவளைப் பிள்ளையார் கோவில், அளவெட்டி. [18032]

உ

ஸ்ரீ காமாட்சி அம்பாள் துணை
ஸ்ரீ விராட் விஸ்வப்பிரமனே நம

## ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!

நிகழும் பிரசோற்பத்தி வருடம் ஆவணி மாதம் 24ஆம் நாள் [09-09-1991] திங்கட்கிழமை பகல் 9-37 முதல் 10-30 வரையிலான துலா லக்கின ★ சுப முகூர்த்தத்தில் ★

| | | |
|---|---|---|
| திரு. இ. மருதமுத்து லட்சுமி தம்பதியின் புத்திரன் திருநிறை செல்வன் **முரளிதரன் (முரளி)** அவர்களுக்கும் | | திரு. ச. சடாக்சரம் நடமணிதேவி தம்பதியின் புத்திரி திருநிறை செல்வி **சுலோசனாதேவி (சுசீலா)** அவர்களுக்கும் |

மணமகள் இல்லத்தில் அம்பாள் அருளால் நடைபெறும் திருமண வைபவத்தில் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்புபசாரம்: மாலை 4 மணிக்கு மணமகள் இல்லத்தில் ("சாயி இல்லம்") நடைபெறும்.

★ தங்கள் நல்வரவை நாடும்: ★

திரு திருமதி இ. மருதமுத்து தம்பதிகள்
"சாயி இல்லம்"
காளி கோவில் வீதி,
ஐயனார் கோவில் றோட்,
வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்.

திரு. திருமதி ச. சடாக்சரம் தம்பதிகள்
938/4, கைலாசபிள்ளையார் வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

— இருவீட்டார் அழைப்பு —

[4288]

## CHEMISTRY

திரு. D. S. சோதி B Sc
சனி — ஞாயிறு

1-00 — PHYSICAL
2-00 — INORGANIC
3-00 — ORGANIC
4-00 — PAPER CLASS

ஆரம்பம்: 08 — 09 — 1991

**BOND INSTITUTES**
58 A, ஸ்ரான்லி வீதி, — யாழ்ப்பாணம். [4288]

## O/L DEC. 91

அனைத்து பாடங்களுக்குமான
**DAY CLASS**
ஆரம்பம்: 09 — 09 — 1991
**BOND INSTITUTES**
58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [4289]

## ஓராண்டு நினைவஞ்சலி

உதயம்:
04—07—1970



அஸ்தமனம்:
20—08—1990

### செல்வன் சின்னத்துரை இளங்கோ

சூரிய மாதத்திலும்
எம்மனதில் நீங்காத
இளவள்ளல் இளங்கோ!
ஈழமதில் இனிமையாய்
இன மனதில் இடம் பிடித்த
இள மதியே இளங்கோ!!
எங்கே நீ சென்று விட்டாய்?
ஓங்கி உயர்ந்த உன்
சிட்டுடலைக் காண்பதற்குத்
தாங்கி உனையீன்ற
தாயவளும் சுற்றமும்
ஏங்கித் தவிக்கையிலே
எங்கே நீ சென்று விட்டாய்?
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தம்பி ஜெயக்காந்தன்,
குடும்பத்தினர், சுற்றத்தவர்கள்.

வசாவிளான். [4279]

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 13 — 04 — 1968
உதிர்வு: 08 — 09 — 1990

செல்வி
### இராசப்பா சித்திரா B. Sc.

(14, அன்னசத்திர ஒழுங்கை, யாழ்ப்பாணம்)

ஓயாது நாவிற்கு உனை அழைத்தாலும்
வாராத இடத்திற்கு உன் தந்தையோடு -
சென்றுவிட்டாய்
ஓராண்டு சென்றாலும் ஆறாது எம் மனம்
ஓயாமல் அழுகிறேன் உனை நினைத்து

உன் பிரிவால் வாடும்,
தோழி (சா. கிரிஜா) 
வேலணை வடக்கு, வேலணை -5 [17690]

## ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணகத்தில்:
28 — 02 — 1944



விண்ணகத்தில்:
20 — 08 — 1990

சரவணையூர் பிரபல வர்த்தகர்

### அமரர் ஆறுமுகம் தியாகராசா
(சோதி)

திதி: 08 — 09 — 1991

✶ ★ ✶ ★

அன்புடன் எமைப் பெற்று, அறிவு, நிதியந்தந்த இன்புடைத் தந்தையே! மனைக்கோர் தீபமாய் ஊருக்கோர் ஒண்ணிலவாய், ஒளிர்ந்த எந்தையே!

நாடும் நலிந்து நாமும் மெலிந்து
வீடும் அலைந்து வேருமறுந்து
போதினியில் யாவும் இழந்து நாம் தவிக்க,
ஆயிரத்து தொளாயிரத்து தொண்ணூறு
ஆகஸ்ட் இருபதாம் திகதி திங்கட்கிழமை
ஆவணி அமாவாசைத் திதியில்
ஈசனவன் ஆசி பெற்றாய் நீ தனை - நீ

முருகனே நின் தொண்டாற்றி
உன் கழல் சேர்ந்த எந்தைக்குச்
சாந்தி அருள்வாய்.

மனைவி,
மக்கள், மருமக்கள்,
சகோதரர்,
மாமன், மாமி,
மைத்துனர், மைத்துனிமார்,
சுற்றத்தார்கள்.

சாரைக்கால் சிவன் கோவிலடி,
இணுவில் கிழக்கு,
இணுவில் [18053]

## ஓராண்டு நினைவஞ்சலி

ஆண்டவன் படைப்பு:
18 06 - 1933

அரக்கன் அழிப்பு:
20 08 - 1990



திதி:
08 — 09 — 1991

தொலகட்டி — வயாவிளான்
அமரர்
### வைத்திலிங்கம் நடராசா
அவர்கள்
(பொறுப்பதிகாரி, வலி-கிழக்குப் பிரதேசசபை, அச்சுவேலி.)

எங்கள் பாசத் தந்தையே!

ஆண்டொன்று சென்றாலும் ஆறாதப்பா எங்கள் மனம்! உங்களின் அன்பு கலந்த பார்வை, புன்னகை பூத்த முகம், புன்சிரிப்பு இவற்றைக் காணாது கண்களும் தினமும் நீரைச் சொரிகின்றன!

உங்களின் ஓராண்டு பூர்த்தி அடைய முன்னர் எமக்கு ஓர் நல்வாழ்வைக் காட்டிய உங்களின் ஆசைகள், கற்பனைகள், எண்ணங்களை எமது உயிர் உள்ளவரை நிறைவேற்றி, உங்களின் காலடியில் கண்ணீர்ப் பூக்களினால் அர்ச்சித்துப் பிரார்த்தித்து நினைவஞ்சலி கூறுகின்றோம்!

உங்களின் ஆத்ம சாந்திக்காக வேண்டி நிற்கும்!

அன்பு மனைவி, மக்கள்
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

புத்தூர் - கிழக்கு,
புத்தூர். [18018]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

## தெற்குப் போர்-II

1989 இல், இக்கட்டான காலத்தில் ஆபத்தான சூழ்நிலையில் பதவிக்கு வந்த பிரேமதாசா, இரண்டரை வருடங்கள் ஜனாதிபதி என்ற அதிகார ஆசனத்தில் இருந்து விட்டார். குவிந்த அதிகாரங்களை இயலுமட்டும் அனுபவித்து விட்டார். எனவே இனியும் அவரை அதிகாரம் செலுத்த அனுமதிக்கக் கூடாது —

இப்போது ஜே.வி.பி யின் ஆபத்தும், தொல்லையும் ஓரளவேனும் தணிந்து விட்டன. ஜனாதிபதி பதவிக்கு உயிராபத்து என்ற நிலை நீங்கிவிட்டது. ஆகையால் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உட்பூசல்களை, பிளவுகளை ஏற்படுத்தியேனும் அவரைப் பதவியில் இருந்து வீழ்த்தி விட வேண்டும் — இவ்வாறாக காமினிக்கும் லலித்துக்கும் பொறாமை எண்ணம் மூழ்த்தது.

தங்கள் இருவரில் ஒருவரைத் தான் பிரேமதாசா பிரதம மந்திரி ஆக்குவார் என்று தேர்தல் முடிந்த புதிதில் இருவருமே கற்பனை செய்தவர்கள்; கனவு கண்டவர்கள். ஆனால் எங்கோ இருந்த விஜேதுங்கா அந்த ஆசனத்தில் அமர்த்தப்பட்டார். லலித் வெறும் விவசாய அமைச்சராக்கப்பட்டார்; பின்னர் சிறு உயர்வு வழங்கப்பட்டு கல்வி மந்திரியாக்கப்பட்டார். காமினி மகாவலி அமைச்சிலிருந்து தோட்டத் துறைக்கு மாற்றப்பட்டார். பின்னர் அமைச்சர் ஆடையே களையப்பட்டார்.

பிரேமதாசாவின் இந்தத் தண்டனைகளுக்காக, பழிக்குப் பழி வாங்குவதற்கு இருவருமே காத்திருந்தனர். இப்போது அதற்கான காலம் கனிந்து விட்டதாகக் கருதினர். இருவரும் சேர்ந்து அரசமைப்பு ரீதியான ஒருசதியை வகுத்தனர். தங்களைப் போலவே பிரேமதாசா மீது வெறுப்புணர்வு கொண்ட சில ஐ.தே.க உறுப்பினர்கள் — அமைச்சர்கள் — துணை அமைச்சர்களைத் தமது பக்கம் வலை வீசி இழுத்தனர்.

அரசியல் விரக்தி விரவிய நிலையிலும், உள்வீட்டுக் கொந்தளிப்பு உச்சக்கட்டம் அடைந்துள்ள நிலையிலும், தத்தளிக்கும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியையும் தம்முடன் சேர்க்க முடியும் என்று அவர்கள் கணக்குப் போட்டனர். அந்தக் கணக்குச் சரியாகவே அமைந்தது!

காமினி - லலித் சதிக்கு வர்க்க பேதமும், சாதி பேதமும் பக்கவேர்களாகத் துணை செய்தன. அவற்றின் காரணமாகவும் அவர்கள் தாங்கள் சமர்ப்பித்த பிரேரணைக்கு ஆதரவாகப் பலரிடம் கையொப்பங்களைப் பெற முடிந்தது.

வஞ்சம் தீர்த்தல், வர்க்க முரண்பாடு ஆகியவையே ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட குற்றவியல் விசாரணை நடத்தக் கோரும் பிரேரணைக்கு மூல காரணங்கள்.

ஆனால், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்றி, நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சியைக் கொண்டு வருவதே தமது அரசமைப்பியல் போரின் குறிக்கோள் என்று காமினி - லலித் கூட்டினர் கூறுகிறார்கள்.

ஆனால் தமிழர்களைப் பொறுத்தவரையில், ஏனைய சிறுபான்மையினரைப் பொறுத்தவரையில், நாடாளுமன்ற சனநாயக ஆட்சியும் பாதகமானதே, கொடுமையானதே. அவர்களுக்கு மிகப் பயங்கரமான விளைவுகளைத் தோற்றுவித்தது அதுவே!

### ஜீ. சி. ஈ. பரீட்சைகள் எப்போது?

# புதிய கல்வி அமைச்சர் நியமனமான பின்பே முடிவு

யாழ்ப்பாணம், செப். 8

இலங்கையில் ஜீ. சி. ஈ. உயர்தர, சாதாரணதர பரீட்சைகளை எப்போது நடத்துவது என்பது குறித்து புதிய கல்வி அமைச்சர் நியமிக்கப்பட்ட பின்னரே முடிவு செய்யப்படும்.

யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கம் இதனைத் தெரிவித்தார்; வெள்ளியன்று யாழ். திரும்பிய அவர் தெரிவித்த மற்றும் தகவல்கள் வருமாறு:-

★ அண்மையில் நடந்த ஜீ. சி. ஈ. (உயர்தர) விசேட பரீட்சை, 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை ஆகியவற்றின் முடிவுகள் ஒருவாரத்தில் தொண்டர் நிறுவனம் மூலமாக இங்கு அனுப்பப்படும்.

★ ஜீ. சி. ஈ (உயர்தர) பரீட்சையின் மனையியல் பாடத்துக்கான செயல்முறைப் பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

★ ஆங்கில உதவி ஆசிரியர் தெரிவுக்கான போட்டிப் பரீட்சை, தாதிமார் பரீட்சை ஆகியவற்றுக்கான விசேட பரீட்சை இந்த மாத இறுதியில் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படும்.

★ யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கான விளையாட்டு உபகரணங்கள், காகிதாதிகள் ஆகியவை கொள்வனவு செய்யப்பட்டு கப்பலில் அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(இ 3)

கொழும்பில் இருந்து

## ஆசிரிய கலாசாலை இறுதிப்பரீட்சை நவம்பரில்!

யாழ்ப்பாணம், செப். 8

பலாலி, கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மாணவருக்கான இறுதிப்பரீட்சைகள் நவம்பரில் நடைபெற இருக்கின்றன.

யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் இத்தகவலைத் தெரிவித்தார்.

கடந்த வருடம் மேற்படி கலாசாலைகளில் இருந்து வெளியேறிய ஆசிரிய மாணவர்களுக்கும் நவம்பரில் பரீட்சை நடைபெறும் என்றும்—

அந்தப் பரீட்சைக்குரிய விண்ணப்பப் படிவங்கள் வந்து சேர்ந்துள்ளன என்றும் அவர் மேலும் சொன்னார்.

[ஒ-3]

## ஆணையிறவு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

காணும் வழியை ஆதரிக்கும் சில சமூக மற்றும் அரசியல் சிந்தனைகளும் இலங்கையில் இன்று உள்ளன.

முழுவதுமாகப் பார்த்தால், இராணுவத்தின் பிரதான சிந்தனை விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையை எவ்வித தயக்கமுமின்றி சிரத்தையுடன் தொடர வேண்டும் என்பதை ஆதரிப்பதாக உள்ளது. ஆனால் இந்த அணுகுமுறையின் பின்னால் பெரிய அளவிலான எதிர்பார்ப்பாக இந்த யுத்தத்தில் எவருக்கும் வெற்றி தோல்வி கிடைக்கப் போவதில்லை — பிந்தியோ, முந்தியோ பேச்சுக்களை மீண்டும் தொடர வேண்டும் — என்பதே உண்மை நிலையாகும்.

★ ஆணையிறவு யுத்தம் ஒரு தரப்பாக முடிவடைந்து விடவில்லை என்று அரசாங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் கூறினார்.

அதே வேளை — யாழ். குடாநாட்டில் தொடரும் புதிய இராணுவ நடவடிக்கைகள் இருதரப்பிலும் பெரிய அழிவை ஏற்படுத்துவதுடன், நாட்டுக்கும் மக்களுக்கும் அது சோழிவையே கொண்டுவரும் என்றும் அந்த சிரேஷ்ட உறுப்பினர் தெரிவித்தார்.

★ தனி ஈழம் என்ற நிலைப்பாட்டுக்கும், ஒற்றை ஆட்சியில் இருந்து இறங்கி வருவது என்ற நிலைப்பாட்டுக்கும் இடையில் கொழும்பு அரசு சிக்கித் தவிக்கிறது. பரீட்சார்த்தமாக சமஷ்டி அமைப்பு முறையை அமுல் நடத்தவும் கொழும்பு அரசு தயாராக இல்லை.

★ ஆயுதப் போராளிகளுக்கும் அவர்களது ஆதரவாளர்களுக்கும் ஈழம் என்பது ஒரு கனவாக இருந்துவருகிறது. புவி — அரசியல் ரீதியாக ஈழம் கொள்கையை இந்தியா ஒருபோதும் ஆதரிக்காது. ஆனால் ஈழம் கொள்கையை அடைய நடத்தப்படும் போராட்டத்தை இராணுவ ரீதியில் குறுகிய காலத்திலோ குமாரான காலத்திலோ அடக்க முடியாது.

இப்படி ராம் தெரிவித்தார்.

[இ-எ]

## தமிழீழ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பகுதிகளைச் சேர்ந்த தமிழீழ மீட்பு நிதி செலுத்த விரும்புவோர், இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் கேட்டுள்ளனர்.

(த)

## பிரேரணை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களை எதிர் நோக்க நேரிடும் என்று நான் நினைக்கின்றேன்.

இந்தப் பிரேரணையைத் தோற்கடித்து ஜனாதிபதி வெற்றியீட்டினாலும், அவர் மீது சுமத்தப்பட்டுள்ள சில குற்றச்சாட்டுகள் தெளிவாக உள்ளன. அவை குறித்து விசாரணைகள் நடத்தப்பட வேண்டிய நிலை ஏற்படலாம்; சில குற்றச்சாட்டுகள் ஜனாதிபதிக்கு மோசமான பாதிப்பை ஏற்படுத்துவதாக உள்ளன.

அதனால் ஜனாதிபதி தரப்பில் இத்தகராறை இணக்கமாகத் தீர்ப்பதற்கு முயற்சி எடுக்கப்படுகிறது.

ஆனால் அதிருப்திக்குழு எம். பிக்களோ ஆட்சிமுறை மாற்றம் பற்றித் தீர்மானிக்க சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்று வலியுறுத்துகின்றனர்.

— இப்படி திரு. கிறிஸ் தோபர் மொறிஸ் தெரிவித்தார்.

[இ-எ]

## பிரேமாவுடன்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வேண்டாம் என்று ஒரு குறிப்பிட்ட குழு என்னைக் கேட்டுக் கொண்டது. அந்தக் குழு எவ்வளவு தொகை உதவியையும் அதற்காக வழங்கத் தயாராக இருந்தது.

இத்தகைய குறுகிய லாபங்களுக்காக நாட்டின் இறைமையைத் தாரை வார்த்துக் கொடுக்க நான் தயாராக இல்லை.

ஒரு நாட்டில் வேறு நாடுகளுக்கு முகாம்கள் நிறுவ இடமளிக்கப்பட்டால், அது அந்த நாட்டு மக்களின் பலத்தை அழித்து விடும். குறிப்பாக அந்நிய நாடுகளின் ஆதிக்கத்தில் இருந்த நாடுகள் இது குறித்துக் கவனமாக இருக்க வேண்டும். — இவ்வாறு ஜனாதிபதி அங்கு தெரிவித்தார்.

[இ-எ]

# பிரபஞ்சம் முழுவதிலுமே முருகனின் அருளாட்சி

பகவானுடைய தரிசனத்தை அடைவது எப்படி? நம்முடைய உள்ளத்தில் இறைவன் கோயில் கொண்டிருப்பதை நிச்சய பக்தியுடன் உணர்வதே கடவுள் தரிசனமாகும்.

தாயின் அன்பைக் குழந்தை எவ்வாறு அறிகிறது? பிறர் வந்து நிரூபித்து அறிவதில்லை. நானும் அதைப் பற்றி விமரிசனம் செய்வதில்லை. தாயின் அன்பைத் தானாகவே உணர்ந்து அனுபவிக்கிறது. தாயின் அன்பை பிறருக்கு எடுத்து விளக்கக் குழந்தைக்குத் தெரியாது. ஆனால் தாயின் அன்பு குழந்தைக்குப் பிரத்தியட்ச தரிசனம். அவ்வாறே கடவுளின் உண்மையும். கடவுள் ஒரு நிருபணப் பொருள் அல்ல. அனுபவப் பொருளாகும்.

எம் 'நெஞ்சக் கன கல்லு நெகிழ்ந்துருகத் தஞ்சத்தருள்' சண்முகனானவன் தமிழ்த் தெய்வம். நம் கண் கண்ட தெய்வம் கலியுகவரதன் என்று அடியார் வணங்கும் கடவுளும் அவனேதான். அவனின் அழியா அழகும், அடங்கா ஆற்றலையும், வேலின் மகிமையையும், பக்தர்களுக்கு அருளும் ஆற்றலையும் நாம் நினைந்து, நினைந்து உருகும்போது, இப்பிரபஞ்சம் முழுவதுமே அவன் அருளாட்சிக்குள் நிலைத்திருப்பதை மனதார உணரலாம்.

தெய்வ பக்தி கங்கையைப் போன்றது. கருமம் யமுனையைப் போன்றது. ஞானம் சரஸ்வதி நதியைப் போன்றது. இம் மூன்றின் கலப்புத்தான் 'திரிவேணி'. பக்தியில் உள்ளமும், செயலும், அறிவும் கலந்து இருக்கவேண்டும்.

சாதாரணமாக, மக்களால் 'பக்தி' என்று குறிப்பிடப்படுவது இறைவன்பால் அன்பு என்பதைக் குறிக்கும். ஆனால் உண்மையில் பக்தி என்பது இறைவன் எம்பால் செலுத்தும் அன்பின் அளவைத்தான் குறிக்கும். இறைவனுக்கு எது பிடிக்கும் என்று உணர்வதே பக்தி என்று பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா வலியுறுத்தித் தெளிவுபடுத்தி இருக்கிறார்.

பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரும் இதே உண்மையை வேறு விதமாக எமக்கு எடுத்துரைத்திருக்கிறார். அதாவது வயல் வரம்பில் நடை போடும் ஒரு சிறு பிள்ளை தன் தகப்பனின் கையைப் பிடித்துக் கொண்டு செல்வானானால், பள்ள மேடுகளில் அவன் நிலை தடுமாறி நிலத்தில் விழுந்துவிடக் கூடும். அவ்வாறின்றி, தகப்பனே பிள்ளையின் கையைப் பற்றிக்கொண்டு அப்பிள்ளையைக் கூட்டிச் செல்வானானால், அப்பிள்ளை நிலத்தில் சறுக்கி விழுவதற்குச் சாத்தியமில்லை. எனவே நாமும் அவனையே சிக்கனப்பிடித்து, உறுதியான சரணாகதியினால் 'பக்தி வலையில்' படுவோனாகிய அப்பிரானை, 'ஒருகால் நினைக்கில் இருகாலும் தோன்றும்' அச்செவ்வேலின் பேரன்பைப் பெறும் நற்றவம் கிடைக்கும்.

இந் நாட்களில் அனைவரும் அளப்பெரும் இன்னல்களால் பாதிக்கப்பட்டு மிகவும் நலிந்த நிலையில், திருவருள் தஞ்சம் ஒன்றே 'தொழுதகை துன்பம் துடைக்கும்' பேராற்றல் வல்லது என்பதனை நன்கு உணர்ந்து, பக்தி சிரத்தையுடன் சிறப்பாய் இறை வழிபாடு செய்து வருவதையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

தனிப்பட்ட ஒவ்வொருவரின் கர்மமுமே நாளடைவில் ஒன்று சேர்ந்த பலரினதும் கூட்டுக் கர்மங்களாய் விஸ்வரூபம் எடுத்து அதன் பலாபலனாய் இடியும், மின்னலும் போல் எம் வாழ்வில் ஏற்படும் பெரும் சோதனைகட்கு அனைவரும் ஆளாக வேண்டிய நிர்ப்பந்தம் போலாகிவிட்டது!

இவ்விதமான கூட்டுக் கர்மங்களை வேரோடு களைய வேண்டுமாயின் அதற்கு உள்ள ஒரே ஒரு நல்ல வழி, நாமனைவரும் எம் ஆத்ம சக்தியை வளர்த்தெடுத்து அதனால் துன்பத்தின் பிடியின் இருந்து விடுபட, ஆத்மீகத் தலைவர்கள் காட்டியருளிய கூட்டுப் பிரார்த்தனை, செபம், தியானம் முதலிய செயல்முறைப்படுத்தலாகும்.

வெற்றி வடிவேலன்-
அவனுடைய
வீரத்தினைப் புகழ்வோம்
சுற்றி நில்லாதே போ-
பகையே
துள்ளி வருகுது வேல்!

நல்லையம்பதி வாழ் முருகன் இன்று தீர்த்த உற்சவத்துக்கு எழுந்தருளி மக்களுக்கு அருட்காட்சி தருவார். சந்தனைத் துதிக்க அவனது வடிவேலும் மயிலும் எமக்குப் பெருந்துணை புரியும். வீரவேல் முருகன் அருட் கருணை எமக்குக் கிடைக்கும். அவன் எமை மறவான். ★

— சி. வே. சிவஞானப்பிரகாசம் —

# சந்தேக நபர்களை கொல்ல முயற்சிக்கப்படலாம்

சென்னை, செப். 8

ராஜீவ் கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டவர்களை ஒழித்துக்கட்ட முயற்சிக்கப்படலாம்.

ராஜீவ் கொலை தொடர்பாக விசாரணை நடத்தி வரும் புலனாய்வுக்குழு இப்படித் தெரிவித்துள்ளது.

சட்டத்தரணிகள் போல் நடித்து சந்தேக நபர்களைக் கொலை செய்ய முயற்சிகள் நடக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

[த]

## லலித் குழுவினரின்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

56 அங்கத்தவர்களில் 52 பேர் சமூகமளித்திருந்தனர்.

திரு. சுசில் முனசிங்க வெளிநாடு சென்றிருப்பதால் கூட்டத்தில் சமூகமளிக்க முடியாதிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

எட்டு உறுப்பினர்களையும் நீக்கும் வாக்களிப்பில் கட்சித் தலைவர் திரு. பிரேமதாசா கலந்து கொள்ளவில்லை.

ஒழுங்கு நடவடிக்கைக் குழு வழங்கிய சிபார்சை ஏற்றே செயற்குழு இத் தீர்மானத்தை எடுத்தது.

இத்தீர்மானம் நேற்று நடைபெற்ற ஐ. தே. காவின் தேசிய நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

எட்டு எம். பிக்களும் ஐ. தே. கவிலிருந்து வெளியேற்றப்பட்டாலும் சில காலத்துக்கு அவர்கள் தொடர்ந்து எம். பிக்களாகச் செயற்படுவதைத் தடுக்க முடியாது என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

அரசமைப்பின் 99 (13) (அ) பிரிவின் கீழ் அவர்கள் தொடர்ந்து எம். பியாகச் செயற்படலாம் என்று சட்ட வல்லுநர்கள் தெரிவித்தனர்.

கட்சி[எம்.]பிக்கள் பட்டியலிலிருந்து ஒருவர் நீக்கப்பட்டாலும் நீக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்கு அவர் தொடர்ந்து எம். பியாகச் செயற்படலாம்.

அந்த ஒரு மாத காலம் முடிவதற்கு முன்னர், தாம் வெளியேற்றப்பட்டதற்கு எதிராக அத்தகைய நபர் உயர் நீதிமன்றத்தில் மனுச் செய்தால் அவர் ஒரு மாத காலத்தின் பின்னரும் எம். பியாகச் செயற்படலாம் எனினும் அத்தகைய மனு தொடர்பாக மூன்று நீதியரசர்களைக் கொண்ட உயர் நீதிமன்றம் விசாரணை செய்து, மனு தாக்கல் செய்த இரண்டு மாத காலத்தினுள் தனது தீர்ப்பை வழங்க வேண்டும்.

கட்சிப் பட்டியலில் இருந்து குறிப்பிட்ட எம்.பி. நீக்கப்பட்டது நீதியானது என்று நீதிமன்றத் தீர்ப்பு தெரிவித்தால், தீர்ப்பு வெளியிடப்பட்ட தினத்திலிருந்து அந்த எம்.பி பதவியிழப்பார்.

கட்சிப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டது தவறு என்று நீதிமன்றம் தீர்ப்புக்கூறினால் அந்த எம் பி தொடர்ந்தும் பதவி வகிக்கமுடியும்.

—இவ்வாறு அரசமைப்பின் 99 [13] [அ] பிரிவில் கூறப்பட்டிருக்கிறது.

இந்த அரசமைப்பு ஏற்பாடுகளுக்கு அமைய, திரு. லலித்தும் அதிருப்தியாளர் குழுவைச் சேர்ந்த ஏனைய ஏழு பேரும் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

[உ-எ-த-3]

## உற்சவ கால நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம் செப் 8

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நடக்கும் இசை மற்றும் சமய அரங்குகளில் தீர்த்தோற்சவமான இன்று மாலை நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிகள் வருமாறு:-

★ நாவலர் மணி மண்டபத்தில் — பண்ணிசைச் செல்வர் நயினை நா. வி. மு. நவரத்தினத்தின் பண்ணிசைக் கச்சேரி.

★ கம்பன் கோட்டத்தில் — சங்கீத பூஷணம் எஸ். பத்மலிங்கத்தின் இன்னிசைக் கச்சேரி.

★ நல்லை ஆதீனத்தில் — பி ப. 2 மணிக்கு திரு. சண்முகவடிவேல் திருமுருகாற்றுப்படை குறித்துச் சொற்பொழிவும், பி. ப. 5 மணிக்கு பிரசங்கபூஷணம் ந. சிவசண்முகமூர்த்தி நிகழ்த்தும் "கந்தரனுபூதி" பற்றிய கதாப்பிரசங்கம் (இன்று பூர்த்தி விழா)

★ மேற்கு வீதி பிள்ளையார் கோவிலில் — கானகதா வாரிதி வை. நித்தியானந்தசர்மா நிகழ்த்தும் இராமாயணம் தொடர் விரிவுரையில் "அக்கினிப் பிரவேசம்"

(அ-30-126)

## கண்டு பிடிப்பு

சென்னை, செப். 8

தற்கொலை செய்து கொண்ட சிவராசனின் கார்ச் சாரதியான ரங்கன் பெங்களூரில் சிவராசன் எங்கெங்கு தலைமறைவாகியிருந்தார் என்ற தகவலை மத்திய புலனாய்வுக் குழுவினரிடம் வெளியிட்டார் என்றும்-

பின்னர் சிவராசன் தங்கியிருந்த இடங்களை பொலிஸுக்கு அவர் காட்டிக் கொடுத்தார் என்றும் சென்னைச் செய்திகள் தெரிவித்தன.

(இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூரில் தேர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி] தீர்த்தோற்சவம் நடைபெறும் காலை 6.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெறும். ஏராளமான முருகன் அடியார்கள் தமது நேர்த்திகளை நிறைவேற்றும் பொருட்டு காவடி, தூக்குக் காவடி என்பன எடுக்கவுள்ளனர். (அ-30)


யாழ், மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் கூட்டுறவுச் சங்கம் விசேட

பொதுச் சபைக் கூட்ட

## அறிவித்தல்

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரால் கூட்டுறவுச் சங்கங்களின் விதி 18 (I) இன் கீழ் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் மேற்படி சங்கத்தின் விசேட பொதுக் கூட்டமொன்றை இத்தால் அழைக்கின்றேன்.

காலம்: 10 - 09 - 1991 முற்பகல் 10 30 மணி

இடம்: யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அலுவலகம்

சங்கத்துக்கென புதிய உபவிதித் தொடர் ஒன்றினை ஏற்றுக்கொள்ளும் விடயம் பற்றி இக் கூட்டத்தில் முக்கியமாக ஆராயப்படும்.

பொதுச்சபை உறுப்பினர்கள் அனைவரையும் இக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றேன்.

குறிப்பு: பொதுச்சபை உறுப்பினர்கள் அனைவருக்கும் தனித்தனியாகவும் இக் கூட்ட அறிவித்தல் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

செ. கனகசபாபதி,
மாவட்ட கூட்டுறவு
அபிவிருத்தி உத்தியோகத்தர்.

யாழ்ப்பாணம்.
[18030]



ஹோம் பினான்ஸ் வைப்பாளர்களுக்கு

## அறிவித்தல்

இல. 484/1 ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இலோஸ் மேச்சென்ற் கட்டடத்தின் முதலாம் மாடியில் அமைந்துள்ள எமது அலுவலகத்தில் மேற்படி வைப்புக்கள் மீளளித்தல் தொடர்பான ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

Director
Accounting Systems
& Services (Jaffna) Ltd
No. 484/1 Hospital Road,
Jaffna.

(18044)


## கண்ணீர் அஞ்சலி

### வீரவேங்கை பாறூக்
(செல்வன் தனபாலன் ஸ்ரீதரன்)
[சென். பற்றிக்ஸ் கல்லூரி மாணவன்]

வீர ஜனனம்: 02 - 01 - 1973

வீர மரணம்: 03 - 09 - 1991

இவர் சிறுப்பிட்டியைச் சேர்ந்த ச. தனபாலன் [ஓய்வு பெற்ற M. O] திருமதி சரஸ்வதி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வன் ஆவார். தாய்மண் மீட்புப் போரில் மணலாறில் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டார்.

இவர் பாலஸ்ரீ, ஸ்ரீமோகன், விஜயஸ்ரீ, சிவகௌரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், திரு. இரத்தினசிங்கம், திருமதி திலகவதி [கொழும்பு] ஆகியோரின் பேறாமகனும் ஆவார்.

இவரது புகழுடல் 06-09-1991 அன்று கோப்பாய் மாவீரர் மயானத்தில் தமிழ் மண்ணுக்காய் விதைக்கப்பட்டது.

இவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரையும் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் வேண்டிக்கொள்கிறோம்.

திரு. ச. தனபாலன் குடும்பத்தினர்.

சிறுப்பிட்டி,
நீர்வேலி.

[18055]

## பல்கலைக் கழக அனுமதி பெற்ற மாணவருக்கு

யாழ்ப்பாணம், செப்: 8

யாழ். மாவட்டத்திலிருந்து 1991 ஆம் ஆண்டு பல்கலைக் கழக அனுமதி பெற்றவர்களுக்கான ''கெல்ட்'' (GELT) ஆங்கில வகுப்புகள் எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகும்.

தெரிவான மாணவர்களும், கடந்த வருடம் ஆங்கிலம் கற்பித்த ஆசிரியர்களும் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் சமூகமளிக்கும்படி ஆங்கிலக் கல்விக்குப் பொறுப்பான பிரதம கல்வி அதிகாரி கேட்டுள்ளார். (த)

## வீரமரணம்

யாழ்ப்பாணம், செப். 8

மணலாறுப் பகுதியில் நேற்று முன்தினம் நடந்த மோதலில் வீரவேங்கை பிறேம் குமார் (கந்தையா தயாபரன் — கரவெட்டி) வீரமரணமடைந்தார்.

இதேசமயம் ஆனையிறவில் கடந்த ஜூலை 15 ஆம் திகதி நடந்த சண்டையில் வீரவேங்கை சந்திரன் [நாகராசா நவதாஸ் — அச்சுவேலி] வீரமரணமடைந்துள்ளார். (ஓ)

## கைக்கடிகாரம் யாருடையது?

நல்லூர் ஆலயத்தில் தாம் கண்டெடுத்த பெண்கள் கைக்கடிகாரம் ஒன்றை முன்னாள் அதிபர் திரு. என். ஏ. நாகராஜா உதயன் பணிமனையில் ஒப்படைத்துள்ளார். அதன் உரிமையாளர் தகுந்த அடையாளங்களைத் தெரிவித்து அதனைப் பெற்றுக் கொள்ளலாம்.

## தியாகி திலீபன் ஞாபகார்த்த சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், செப். 8

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தால் நடத்தப்படும் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையேயான தியாகி திலீபன் ஞாபகார்த்த கரப்பந்து-[ஆண்கள்], வலைப்பந்து [பெண்கள்] சுற்றுப் போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவு தினம் எதிர்வரும் 12 ஆம் திகதி ஆகும்.

விண்ணப்பங்கள் கோட்டக் கல்வி அலுவலகங்களில் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும்—

பெயர்ப்பட்டியல் குழு வீரர்களின் கையொப்பத்துடன் பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [த]

## புலிகள் மீதான நடவடிக்கை தொடருமாம்

சென்னை, செப். 8

தமிழகத்தில் விடுதலைப் புலிகள் மீதான நடவடிக்கை தொடரும் என்று மாநில பொலீஸ் ஆணையாளர் வோல்டர் தேவாரம் அறிவித்தார்.

தேடப்பட்டுவந்த பிரதான சந்தேக நபர் சிவராசனின் தற்கொலையுடன் பொலீஸாரின் பணி முடிவடைந்து விடவில்லை என்றும் திரு. தேவாரம் அறிவித்தார். (இ-எ)

## தொண்டமான் இந்தியாவுக்கு...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி] மாக அங்கு அழைத்திருக்க வேண்டும் என்று சந்தேகிக்கப்படுகிறது.

புலிகளுடன் சமரசம் செய்யும் முயற்சியில் ஸ்ரீ லங்கா அரசு ஈடுபடுவதை இந்தியா அறவே விரும்பவில்லை என்றும்—

ஆகையினால் அத்தகைய முயற்சியில் ஈடுபட வேண்டாம் என்று திரு. தொண்டமானிடம் காட்டமாகத் தெரிவிக்கவே அவரை இந்திய அதிகாரிகள் அழைத்திருக்கக் கூடும் என அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர். (உ)

## மரண அறிவித்தல்கள்

### செல்வன். நடேசன் வைத்திலிங்கம்

புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் ஜெனிவாவை வதிப்பிடமாகக் கொண்டவரும், ஜெனிவாவில் உள்ள அமெரிக்க தூதரக உத்தியோகத்தருமான செல்வன். நடேசன் வைத்திலிங்கம் 29-08-91 அன்று காலமானார்.

இவர் காலஞ் சென்ற திரு. க. வைத்திலிங்கம் திருமதி. சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற சேதீஸ்வரன், அருட்செல்வி, மோகனராஜன் ஆகியோரின் ஆசை சகோதரனும் காலஞ்சென்ற திரு. கந்தப்பு, திருமதி அன்னப்பிள்ளை, காலஞ் சென்ற திரு. திருமதி சின்னத்துரை ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ் சென்ற திரு. சி. பாலசுப்பிரமணியம், திருமதி பா. கனகமணி ஆகியோரின் ஆசை மருமகனும், திரு. செ. பொன்னையா, திருமதி பொ. மீனாட்சி, காலஞ்சென்ற செல்லத்துரை ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ் சென்ற திருப்பூங்குடி வி. வி. கே. ஆறுமுகம், காலஞ்சென்ற திரு. க. கனகரெத்தினம், திருமதி இராஜேஸ்வரி ஆறுமுகம் (லண்டன்) திருமதி பத்மாசனிதேவி கனகரெத்தினம் ஆகியோரின் அன்புப் பெறாமகனும் திருமதி வான்மதி முத்துலிங்கம் (அமெரிக்கா), திருமதி தவமதி விக்கினேஸ்வரன் (லண்டன்), மதிமோகன் (அமெரிக்கா), மதீஸ்வரன் (லண்டன்), சிவமதி (லண்டன்), திருமதி கலாமதி வன்னியசிங்கம் (ஜெனிவா), திருமதி வளர்மதி கிருஸ்சாந்தகுமார் (லண்டன்), மயூரதன் (கனடா), கலைமதி ஆகியோரின் அன்பு சகோதரனும் திரு. முத்துலிங்கம் (அமெரிக்கா), திரு. வன்னியசிங்கம் (ஜெனிவா), திரு. விக்கினேஸ்வரன் (லண்டன்), திரு. கிருஸ்சாந்தக்குமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கிருஸ்ணகுமார் (கனடா), சுரேஸ்குமார், ரமேஸ்குமாரி, திருமதி உதயகுமாரி போசராஜா (கனடா), ஆகியோரின் சொந்த மைத்துனரும், திரு. போசராஜா (கனடா) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் யாவும் ஜெனிவாவில் நடைபெற்றன. இத் தகவலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-

திரு. க. வன்னியசிங்கம் (மைத்துனர்)
திருமதி கலாமதி வன்னியசிங்கம் (சகோதரி)
திருமதி பத்மாசனிதேவி கனகரெத்தினம் (சிறிய தாயார்)

விலாசம்:-
7 RUE AMAT, 1202 GENEVA.
25, நக்கா வீதி, யாழ்ப்பாணம்.

(18036)

### திருமதி ஆறுமுகம் இராசம்மா

அரியாலையைச் சேர்ந்த திருமதி இராசம்மா 7-9-91இல் காலமானார். இவர் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தம்பிஐயா, அப்பாத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், தாமோதரம்பிள்ளை (மதுபான இலாகா ஓய்வு பெற்ற சார்ஜன்ட்), தருமலிங்கம் (திருமண ஒப்பந்தகாரர்), தியாகராசா (பிரான்ஸ்), திருமதி சரஸ்வதி இராசரட்ணம், பிரகலாதன் (கணக்காளர், அண்ணா தொழிலகம், இணுவில்), திரிலோகசுஸ்வரா (நீர்ப்பாசனத் திணைக்களம், கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தாயாரும், தவமணி, மோகனாம்பிகை, இராசரட்ணம் (இ. போ. ச. நடத்துனர், காரைநகர் டிப்போ), புவனேஸ்வரி, கோசலராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 8-9-91 இன்று காலை 9-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக அரியாலை சித்துபாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல் :
ஆ. தாமோதரம்பிள்ளை

24, புறாடி லேன்,
அரியாலை.

[18056]

## பதிய கோரிக்கை

யாழ்ப்பாணம். செப் 8

கொழும்பில் சிகிச்சை பெற வைத்திய அதிகாரிகளினால் சிபார்சு செய்யப்பட்ட நோயாளர்கள் அனைவரும் எதிர்வரும் 10, 11 ம் திகதிகளில் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை யாழ். போதனா வைத்தியசாலையில் பதிவு செய்து கொள்ளுமாறு கோரப்படுகின்றனர்.

உரிய ஆவணங்களுடன் நோயாளிகோ அல்லது அவரின் நெருங்கிய உறவினரோ வந்து பதிவு செய்து கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ - 15)


யாழ்ப்பாணம்
பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 91-09-30 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

1. தாவரவியல் - சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II/ உதவி விரிவுரையாளர்.
2. தற்காலிக உதவி விரிவுரையாளர் (கணனி விஞ்ஞானம்)

சம்பள அளவுத்திட்டம்

1. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I — ரூபா 9,600 - 8 x 250 - 11,600/- மாதமொன்றுக்கு
2. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II — ரூபா 8,000 - 5 x 250 - 9,250/- மாதமொன்றுக்கு
3. உதவி விரிவுரையாளர்- ரூபா 3,900/- மாதமொன்றுக்கு (நிலையானது) ஒரு வருடத்திற்கு.
4. தற்காலிக உதவி விரிவுரையாளர் — ரூபா 3,900/- மாதமொன்றுக்கு (நிலையானது)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக் கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களைத் தபாலில் பெற விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களிற்கான வேண்டுகோளுடன் சுயமுகவரியிட்டு ரூபா 1.50 முத்திரையொட்டப்பட்ட 23x10 ச.மீ. அளவுடைய கடித உறை அனுப்பப்படல் வேண்டும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளில் உள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும்/அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவார்.

- பதிவாளர்.

யாழ்ப்பாணப்-
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்:
1991-09-04

[இ-0475]



COMPLAN காம்ப்ளான் R

குழந்தைகள், கர்ப்பிணிகள், முதியோர் அனைவருக்குமானது. இழந்த ஊட்டத்தைப் பூர்த்தி செய்ய 22 அத்தியாவசியமான ஊட்டச் சத்துக்கள் அடங்கியது.

COMPLAN திட்டமிட்ட பரிபூரண உணவு.

3 நாவிற்கினிய சுவைகளிலே கிடைக்கிறது.

[சி-0268]

GLAXO [CEYLON] LTD.,


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டால் ... 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 08-09-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org